அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

33 T I

முதலாம் தவணைப் பரீட்சை– தரம் 13 – 2020

**First Term Test - Grade 13- 2020**

சுட்டெண் : ........................

கணக்கீடு I
Accounting I

காலம் : 2 மணி

- **01 – 30 வரையிலான வினாக்களுக்கு சரியான விடைகளை இனங்கண்டு அருகிலுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.**
- **31 – 50 வரையிலான வினாக்களுக்கு சரியான விடைகளை உரிய இடைவெளிகளில் எழுதுக.**

(1) நிதி அறிக்கைகயிடலின் எண்ணக்கரு ரீதியான மாதிரி சட்டகத்திற்கு அமைய பொது நோக்க நிதிக்கூற்றுக்களின் நோக்கமாக அமைவது,

1. கணக்கீட்டு அலகொன்றின் முதலீட்டாளர்கள் மற்றும் அரசு ஆகியவற்றிற்கு நிதி மற்றும் நிதி சாரா தகவல்களை வழங்குதல்.
2. வணிகக் கொடுக்கல் வாங்கல்களை கணக்கேடுகளில் பதிவு செய்தல்.
3. வணிகத்தின் உரிமையாளர்கள் தீர்மானம் எடுப்பதற்காக கடந்த கால மற்றும் எதிர்கால தகவல்களை வழங்குதல்.
4. வணிக அலகொன்றில் தற்போது காணப்படுகின்றதும், எதிர்கால முதலீட்டாளர்கள், கடன் வழங்குனர்கள், ஏனைய கடன்கொடுத்தோர் போன்றோர்கள் அவ்வலகிற்கு தேவையான வளங்களை வழங்குதல் தொடர்பாகத் தீர்மானமெடுப்பதற்குத் தேவையான நிதித் தகவல்களை வழங்குதல்.
5. நிறுவனமொன்றின் வருடாந்த கணக்காய்விற்கு அவசியமான நிதித் தகவல்களை வழங்குதல். (…….)

(2) பின்வருவனவற்றுள் கணக்கீட்டுச் செயன்முறையினை ஒழுங்கு வரிசைப்படி காட்டும் சரியான விடைத்தொகுதி,

A - முதன்மை ஏடுகளில் பதிவு செய்தல்.
B - கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் இடம்பெறுதல்.
C - பரிட்சை மீதியைத் தயாரித்தல்.
D - மூல ஆவணங்களை திரட்டுதல்.
E - பொதுப்பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றுதலும் சமப்படுத்தும்.

1. BDAEC 2. ABCDE 3. BDEAC
4. ABDEC 5. DBAEC (…….)

(3) வணிகமொன்றின் வியாபார சென்மதியாளருக்கு செலுத்தவேண்டிய ரூபா 120 000 தொகையானது 10% கழிவு நீக்கி அதன் உரிமையாளரினால் அவரது சொந்த நிதியிலிருந்து செலுத்தப்பட்டது.
மேற்படி கொடுக்கல் வாங்கல் கணக்கீட்ச் சமன்பாட்டில் **பொறுப்புக்கள்** மற்றும் **உரிமையாண்மை** ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக்கமாக அமைவது,

| | **பொறுப்புக்கள்** | **உரிமையாண்மை** |
|---|---|---|
| 1. | ரூபா 108 000 குறையும் | ரூபா 108 000 குறையும் |
| 2. | ரூபா 120 000 குறையும் | ரூபா 120 000 அதிகரிக்கும் |
| 3. | ரூபா 108 000 குறையும் | ரூபா 108 000 அதிகரிக்கும் |
| 4. | ரூபா 120 000 குறையும் | ரூபா 120 000 குறையும் |
| 5. | ரூபா 132 000 குறையும் | ரூபா 132 000 அதிகரிக்கும் |

(…….)



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

(4) நிதி அறிக்கைகயிடலின் எண்ணக்கரு ரீதியான மாதிரி சட்டத்திற்கு அமைய நிதிக் கூற்றுக்களில் அடிப்படை எடுகோள் எது?

1. அட்டுரு
2. அலகுசார்
3. தொடர்ந்து இயங்குதல்
4. பண அளவீடு
5. கால அளவீடு

(…….)

(5) தகவல்களைப் பயன்படுத்தும் பிரிவினர்களின் தீர்மானங்களின் மாற்றம் செய்வதற்குரிய ஆற்றல் நிதிக் கூற்றுக்களின் தகவல்களுக்குக் காணப்படுமாயின், அது நிதித் தகவலின் எத் தர ரீதியான பண்பினை வெளிப்படுத்துகிறது?

1. காலத்திற்குப் பொருத்தமான தன்மை
2. ஒப்பிடக்கூடிய தன்மை
3. நம்பகரமான பிரதிநிதித்துவம்
4. விளங்கிக்கொள்ளக்கூடிய தன்மை
5. பொருத்மான தன்மை

(…….)

(6) வணிகமொன்றின் குறித்த நிதியாண்டில் மொத்த சொத்துக்கள் ரூபா 500 000 இனாலும், மொத்த பொறுப்புக்கள் ரூபா 200 000 இனாலும் அதிகரித்துள்ளது. ஆண்டு காலத்தில் உரிமையாளர் ரூபா 50 000 ஐப் பற்றியுள்ளார். எனின், முடிவடைந்த ஆண்டுக்கான வணிகத்தின் இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு?

1. ரூபா 350 000 இலாபம்
2. ரூபா 350 000 நட்டம்
3. ரூபா 750 000 இலாபம்
4. ரூபா 700 000 நட்டம்
5. ரூபா 200 000 நட்டம்

(…….)

(7) எதிரப்பார்க்கை நட்டப் படிகளுக்கான ஏற்பாடு, விற்பனைத் திரும்பல், திரண்ட தேய்வு மற்றும் பற்று ஆகியன முறையே எக் கணக்கு வகைக்குரியது?

1. பொறுப்பு, வருமானம், பொறுப்பு, செலவு
2. சொத்து, வருமானம், பொறுப்பு, உரிமையாண்மை
3. சொத்து, வருமானம், சொத்து, உரிமையாண்மை
4. பொறுப்பு, செலவு, சொத்து, செலவு
5. சொத்து, செலவு, பொறுப்பு, உரிமையாண்மை

(…….)

(8) நிதி அறிக்கையிடலின் எண்ணக்கரு ரீதியான மாதிரி சட்டகத்திற்கு அமைய பொறுப்பொன்றின் பண்புகளாக அமைவது பின்வருவனவற்றுள் எது/எவை?

A - வரைவிலக்கணத்திற்கு ஏற்புடையதாக இருத்தல்.
B - தீர்க்கும் போது எதிர்காலத்தில் பொருளாதார வளம் கைமாற்றம் செய்யப்படல்.
C - கடந்தகால கொடுக்கல் வாங்கலொன்றின் விளைவாக உருவானமை.
D - பெறுமதியை நம்பகரமான முறையில் மதிப்பிட முடிதல்.

1. A மாத்திரம்
2. A, B மாத்திரம்
3. A, B, C மாத்திரம்
4. B, C மாத்திரம்
5. A, B, C, D அனைத்தும்

(…….)

(9) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களில் **உரிமையாண்மை அதிகரிப்பில்** தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள் எது?

1. வியாபார வருமதிகளிடமிருந்து காசு பெறுவனவு
2. அழிவடைந்த இருப்புக்காக காப்புறுதி நட்ட ஈட்டினைப் பெற்றுக்கொள்ளல்.
3. உரிமையாளர் தனது சொந்த நிதியின் மூலம் வணிகத்தின் செலவொன்றைக் கொடுத்தல்.
4. பொருள் கொள்வனவின் போது வியாபாரக் கழிவு கிடைத்தல்
5. வியாபார சென்மதியாளருக்கு காசு செலுத்தும் போது கழிவு கிடைத்தல்.

(…….)

(10) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுள் வணிகமொன்றின் கொள்வனவு நாளேட்டில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல் எது?

1. அனைத்து கடன் கொள்வனவுகள்
2. மீள் விற்பனைக்காக கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள்
3. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கடன் கொள்வனவு
4. வியாபாரப் பொருட்களின் காசுக் கொள்வனவு
5. தளபாட உபகரணங்களின் கடன் கொள்வனவு

(…….)


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

(11) தாரக பொதுக் கம்பனி 15% பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவுசெய்யப்பட்ட வணிகம் ஆகும். 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.

- VAT உட்பட விற்பனை ரூபா 460 000
- VAT உட்பட கொள்வனவு ரூபா 115 000
- ஆண்டுகாலத்தில் செலுத்திய VAT ரூபா 20 000

2020.03.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு எவ்வளவு?

1. ரூபா 25 000 2. ரூபா 45 000 3. ரூபா 60 000
4. ரூபா 115 000 5. ரூபா 450 000 (…….)

❖ **12, 13, 14 ஆகிய வினாக்களுக்கு பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.**

வணிகம் ஒன்றின் 2020 மார்ச் மாதத்திற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

- காசுப் பெறுவனவு நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 460 000
- காசுக் கொடுப்பனவு நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 210 000
- மார்ச் 31 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள்:
  - தேறிய காசோலைகள் ரூபா 390 000
  - நிலையான கட்டளைக் கொடுப்பனவு ரூபா 22 000
  - வியாபார வருமதியாளர் நேரடி வைப்பு ரூபா 80 000
  - வழங்கப்பட்ட காசோலைகள் ரூபா 180 000
- 2020.03.01 இல் காசு மீதி ரூபா 62 000 ஆகும்.

(12) 2020.03.31 இல் உள்ளவாறான காசுக் கட்டுப்பாட்டு கணக்கு மீதி எவ்வளவு?

1. ரூபா 62 000 2. ரூபா 210 000 3. ரூபா 312 000
4. ரூபா 460 000 5. ரூபா 670 000 (…….)

(13) 2020.03.31 இல் உள்ளவாறான சீராக்கிய காசுக் கணக்கு மீதி எவ்வளவு?

1. ரூபா 84 000 2. ரூபா 102 000 3. ரூபா 312 000
4. ரூபா 370 000 5. ரூபா 522 000 (…….)

(14) 2020.03.31 இல் உள்ளவாறான வங்கி கூற்றுப்படி மீதி எவ்வளவு?

1. ரூபா 242 000 2. ரூபா 310 000 3. ரூபா 330 000
4. ரூபா 460 000 5. ரூபா 670 000 (…….)

(15) வணிகம் ஒன்றில் 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட வரைவு நிதிக்கூற்றுக்களுக்கமைய தேறிய இலாபம் ரூபா 262 000 ஆகும். எனினும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன.

- கடன் விற்பனை ரூபா 50 000 விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்படவில்லை.
- கொள்வனவுத் திரும்பல் ரூபா 15 000 கொள்வனவு கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.
- காசுக் கொடுப்பனவு நாளேட்டின் கழிவு நிழலின் கூட்டுத்தொகை ரூபா 12 000 கொடுத்த கழிவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சரியான இலாபம் எவ்வளவு?

1. ரூபா 267 000 2. ரூபா 291 000 3. ரூபா 301 000
4. ரூபா 312 000 5. ரூபா 336 000 (…….)

(16) கம்பனி ஒன்றின் இருப்பு உருப்படி தொடர்பான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| உருப்படி | கிரயம் (ரூபா) | எதிர்பார்க்கப்படும் விற்பனைப் பெறுமதி (ரூபா) | எதிர்பார்க்கப்படும் விற்பனைச் செலவு (ரூபா) |
|---|---|---|---|
| 1 | 25 000 | 30 000 | 6 000 |
| 2 | 12 000 | 15 000 | 2 000 |
| 3 | 24 000 | 32 000 | 6 000 |



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

NWP - EXAM

கம்பனியானது **உருப்படி அடிப்படையில்** இருப்பு மதிப்பிடலை மேற்கொள்கின்றது.
நிதியாண்டு இறுதியில் இருப்பின் கிரயம் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய இறுதி இருப்பின் பெறுமதி என்பன முறையே,

| | **இருப்பின் கிரயம் (ரூபா)** | **இறுதி இருப்பின் பெறுமதி (ரூபா)** |
|---|---|---|
| 1. | 25 000 | 24 000 |
| 2. | 37 000 | 45 000 |
| 3. | 61 000 | 60 000 |
| 4. | 61 000 | 77 000 |
| 5. | 77 000 | 77 000 |

(…….)

(17) பின்வருவன கம்பனி ஒன்றின் 2020 மார்ச் மாத இருப்பு உருப்படி தொடர்பான தகவல்களாகும்.

| **திகதி** | **விபரம்** | **எண்ணிக்கை (அலகுகள்)** | **அலகொன்றின் கிரயம் (ரூபா)** |
|---|---|---|---|
| 2020.03.01 | மீதி | 2 000 | 50 |
| 2020.03.15 | கொள்வனவு | 3 000 | 80 |
| 2020.03.28 | விற்பனை | 3 000 | ? |

கம்பனியானது இருப்பு மதிப்பிடலுக்காக முதல் உள் - முதல் வெளி (FIFO) முறையை பின்பற்றுகிறது. 2020.03.31 இல் விற்பனைக் கிரயம் மற்றும் இறுதி இருப்பின் பெறுமதி என்பன எவ்வளவு?

| | **விற்பனைக் கிரயம் (ரூபா)** | **இறுதி இருப்பின் பெறுமதி (ரூபா)** |
|---|---|---|
| 1. | ரூபா 80 000 | ரூபா 160 000 |
| 2. | ரூபா 80 000 | ரூபா 100 000 |
| 3. | ரூபா 100 000 | ரூபா 180 000 |
| 4. | ரூபா 180 000 | ரூபா 100 000 |
| 5. | ரூபா 180 000 | ரூபா 160 000 |

(…….)

(18) பின்வரும் தகவல்கள் உற்பத்திக் கம்பனி ஒன்றின் 2020 மார்ச் மாதத்துடன் தொடர்புடையதாகும்.

| | (ரூபா 000) |
|---|---|
| பயன்படுத்திய நேர் மூலப்பொருள் | 400 |
| நேர்க்கூலி | 200 |
| தொழிற்சாலை பொது மேந்தலை கிரயம் | 150 |
| மூலப்பொருள் இருப்பு அதிகரிப்பு | 50 |
| குறை வேலை இருப்பு குறைவு | 100 |

2020 மார்ச் மாதத்திற்கான முதன்மை கிரயம் மற்றும் மொத்த உற்பத்திக் கிரயம் என்பன எவ்வளவு?

| | **முதன்மைக் கிரயம் (ரூபா)** | **மொத்த உற்பத்திக் கிரயம் (ரூபா)** |
|---|---|---|
| 1. | 600 000 | 550 000 |
| 2. | 600 000 | 650 000 |
| 3. | 550 000 | 600 000 |
| 4. | 550 000 | 800 000 |
| 5. | 650 000 | 900 000 |

(…….)

❖ **19 மற்றும் 20 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

- 2017.04.01 இல் ஆரம்பிக்கப்பட்ட நலன்புரிச் சங்கமொன்றின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 50 ஆவதுடன், அவர்களுள் 10 பேர் ஆயுள் அங்கத்தவர்களாவர்.
- ஆண்டுக்கான அங்கத்துவ சந்தாக் கட்டணம் ரூபா 1 000 ஆவதுடன், ஆயுள் அங்கத்துவக் கட்டணம், சாதாரண அங்கத்துவ சந்தா கட்டணத்தின் பத்து மடங்காகும்.
- ஆயுள் அங்கத்துவ கட்டணத்தினை பெறப்பட்ட ஆண்டிலிருந்து பத்து வருடங்களுக்கு சமமான வருமானமாக பதிவளிப்பது கழகத்தின் கொள்கையாகும்.
- <u>2019.04.01 இல் பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றன:</u>

| | |
|---|---|
| அட்டுரு அங்கத்துவக் கட்டணம் | ரூபா 12 000 |
| முற்பணமாகப் பெற்ற அங்கத்துவக் கட்டணம் | ரூபா 10 000 |
| ஆயுள் அங்கத்துவக் கட்டண நிதி | ? |

- 2020.03.31 இல் 8 அங்கத்தவர்கள் அங்கத்துவ கட்டணத்தை செலுத்தியிருக்கவில்லை.


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.
NWP - EXAM

(19) 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அங்கத்துவ சந்தா வருமானம் மற்றும் ஆண்டுகாலத்தில் காசாகப் பெறப்பட்ட அங்கத்துவக் கட்டணம் என்பன முறையே,

| | **அங்கத்துவ சந்தா வருமானம் (ரூபா)** | **காசாகப் பெறப்பட்ட அங்கத்துவக் கட்டணம் (ரூபா)** |
|---|---|---|
| 1. | 32 000 | 30 000 |
| 2. | 32 000 | 34 000 |
| 3. | 40 000 | 34 000 |
| 4. | 50 000 | 34 000 |
| 5. | 50 000 | 44 000 |

(.......)

(20) 2020.03.31 இல் உள்ளவாறான ஆயுள் அங்கத்துவ கட்டண நிதி எவ்வளவு?
1. ரூபா 70 000 2. ரூபா 80 000 3. ரூபா 90 000
4. ரூபா 100 000 5. ரூபா 120 000 (.......)

(21) பின்வருவனவற்றுள் 1890 ஆம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவிற்கு உட்பட்ட விடயங்கள் எது/எவை?
A - இலாப நட்டமானது பங்காளர்களிடையே சமமாகப் பகிரப்படல் வேண்டும்.
B - பங்காளர்களின் மூலதன மீதிக்கு வட்டி செலுத்துதல் வேண்டும்.
C - பங்காளர்கள் சம்பளத்திற்கு உரித்துடையவர்கள் அல்லர்.
D - பங்காளர்களினால் பங்குடமைக்கு வழங்கப்படும் கடன்களுக்கு 5% வட்டி பெற உரித்துடையவர்களாவர்.

1. A மட்டும் 2. A, B மட்டும் 3. A, B, C மட்டும்
4. A, C, D மட்டும் 5. A, B, C, D அனைத்தும் (.......)

❖ **22, 23, 24 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொள்க.**
அமாலி மற்றும் பிமாலி ஆகியோரினால் 3:2 எனும் இலாப நட்ட விகிதத்தில் நடாத்திச் செல்லப்படும் பங்குடமை வணிகத்தில் 2019.04.01 இல் சமாலி என்பவர் ரூபா 500 000 மூலதனமாக இட்டு புதிய பங்காளராக இணைத்துக் கொள்ளப்பட்டார். அன்றைய தினத்தில் மதிப்பிடப்பட்ட பங்குடமையின் நன்மதிப்பானது மூலதனக் கணக்கினூடாக சீராக்கம் செய்யப்பட்டது.

அமாலி, பிமாலி மற்றும் சமாலி பங்குடமையின் ஒப்பந்தம் பின்வருமாறு:
- இலாப நட்ட விகிதம் 3:2:1 ஆகும்.
- அமாலி மற்றும் பிமாலி ஆகியோர் வருடாந்தம் ரூபா 180 000 சம்பளம் பெற உரித்துடையவர்களாவர்.
- மூலதன மீதிக்கு 10% வட்டி வழங்கப்படும்.

| | **மூலதனக் கணக்கு (ரூபா)** | | **நடைமுறைக் கணக்கு (ரூபா)** | |
|---|---|---|---|---|
| | **2019.04.01 இல்** | **2020.03.31 இல்** | **2019.04.01 இல்** | **2020.03.31 இல்** |
| அமாலி | 1 200 | ? | 500 | 1120 |
| பிமாலி | 1 000 | ? | 400 | ? |
| சமாலி | - | 300 | - | ? |

(22) சமாலி பங்குடமையில் இணைத்துக் கொள்ளப்படும் போது பங்குடமையின் மொத்த நன்மதிப்பு எவ்வளவு?
1. ரூபா 800 000 2. ரூபா 1 200 000 3. ரூபா 1 500 000
4. ரூபா 2 000 000 5. ரூபா 3 000 000 (.......)

(23) 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பங்குடைமையின் இலாபம் எவ்வளவு?
1. ரூபா 200 000 2. ரூபா 400 000 3. ரூபா 600 000
4. ரூபா 650 000 5. ரூபா 1 246 000 (.......)

(24) 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் அமாலிக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த இலாபம் எவ்வளவு?
1. ரூபா 100 000 2. ரூபா 300 000 3. ரூபா 440 000
4. ரூபா 620 000 5. ரூபா 650 000 (.......)


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

(25) பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றினால 2019.10.01 இல் கையகப்படுத்திக் கொண்ட இயந்திரம் தொடர்பான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன. பெறுமதி சேர் வரி (VAT) 15% ஆகும்.

- கொள் விலை VAT உட்பட — ரூபா 690 000
- இடத்தைத் தயார்படுத்தல் செலவு — ரூபா 150 000
- இயந்திரத்தைப் பொருத்துதல் செலவு — ரூபா 100 000
- ஆரம்ப பரிசோதனை கிரயம — ரூபா 70 000
- ஆரம்ப பரிசோதனை உற்பத்திகளின் விற்பனை வருமானம் — ரூபா 20 000
- பயன்தரு ஆயுட்காலம் — 10 வருடங்கள்

LKAS 16 (ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்) நியமத்திற்கு அமைய இயந்திரத்தின் கிரயம் மற்றும் 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இயந்திரத்தின் பெறுமானத் தேய்வு என்பன எவ்வளவு?

| | கிரயம் (ரூ 000) | பெறுமானத் தேய்வு (ரூ 000) |
|---|---|---|
| 1. | 600 | 60 |
| 2. | 690 | 69 |
| 3. | 750 | 75 |
| 4. | 850 | 85 |
| 5. | 900 | 45 |

(…….)

(26) கம்பனியொன்று 2019.04.01 இல் நிதிக் குத்தகையின் அடிப்படையில் மோட்டார் வாகனமொன்றைப் பெற்றுக் கொண்டதுடன், அன்றைய தினத்தில் ஆரம்ப வைப்பாக ரூபா 200 000 ஐச் செலுத்தியது. அன்றைய தினத்தில் குத்தகைத் தவணைக் கட்டணங்களின் ஆகக் குறைந்த நிகழ்காலப் பெறுமதி ரூபா 624 000 ஆகும். பயன்படுத்துவதற்கு உரித்தான மோட்டார் வாகனத்தின் கிரயம் எவ்வளவு?

1. ரூபா 200 000
2. ரூபா 624 000
3. ரூபா 824 000
4. ரூபா 400 000
5. ரூபா 924 000

(…….)

(27) வரையறுக்கப்பட்ட சாகர் பொதுக் கம்பனியினால் 2020.03.31 இல் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களானவை, 2020.06.30 இல் இயக்குனர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது,. 2020.03.31 இற்குப் பின்னர் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

A - 2020.03.31 இல் உள்ளவாறான ரூபா 12 000 வியாபார வருமதியாளர் ஒருவர் 2020.05.02 இல் மரணித்துள்ளார்.

B - 2020.03.31 இல் ரூபா 600 000 கிரயமான இருப்புக்கள் 2020.07.02 இல் ரூபா 520 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

C - 2020.04.01 இல் கம்பனியின் சாதாரண பங்குதாரர்களுக்கு ரூபா 150 000 பங்கிலாபம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

LKAS 10 (அறிக்கையிடல் தினத்திற்கு பின்னரான நிகழ்வுகள்) நியமத்திற்கு அமைய 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் **சீராக்கம் செய்ய வேண்டிய நிகழ்வு** எது/எவை?

1. A மட்டும்
2. B மட்டும்
3. C மட்டும்
4. A, B மட்டும்
5. A, B, C அனைத்தும்

(…….)

(28) LKAS 1 (நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்) நியமத்திற்கு அமைய பொதுக் கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களாக **அமையாதது,**

1. மொத்த முற்றுமடங்கிய வருமானக்கூற்று
2. உரிமை மாற்றல் கூற்று
3. காசுப்பாய்ச்சல் கூற்று
4. பரீட்சை மீதி
5. கணக்கீட்டுக் குறிப்புகள்

(…….)

NWP - EXAM



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

❖ **29, 30 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொள்க.**
காலா பொதுக் கம்பனியின் 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | (ரூ 000) |
|---|---|
| - விற்பனை வருமானம் | 600 |
| - பெற்ற வியாபார கழிவு | 100 |
| - மீள் மதிப்பீட்டு மிகை | 150 |
| - செயற்பாட்டுச் செலவுகள் | 120 |

- 2019.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் ரூபா 90 000 மீள்மதிப்பீட்டு குறையொன்று ஏற்பட்டுள்ளது.

(29) 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் எவ்வளவு?
1. ரூபா 570 000 2. ரூபா 580 000 3. ரூபா 750 000
4. ரூபா 870 000 5. ரூபா 1 070 000 (…….)

(30) 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் எவ்வளவு?
1. ரூபா 480 000 2. ரூபா 630 000 3. ரூபா 820 000
4. ரூபா 870 000 5. ரூபா 1 220 000 (…….)

❖ **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.**

(31) பின்வரும் கூற்றுகள் **உண்மை** அல்லது **பொய்** என குறிப்பிடுக.

| | | **உண்மை/பொய்** |
|---|---|---|
| A - | நிறுவனமொன்றின் தகவல்களைப் பயன்படுத்தும் தரப்பினர்களுக்கு தீர்மானம் மேற்கொள்வதற்கான தகவல்களை வழங்குவது முகாமை கணக்கீட்டின் நோக்கம் ஆகும். | ………………. |
| B - | வியாபார சென்மதியாளர்களுக்கு காசு செலுத்தும் போது உரிமையாண்மை குறையும். | ………………. |
| C - | நிதிக் கணக்கீட்டின் போது பணத்தினால் அளவிடக்கூடிய கடந்தகால தகவல்கள் மாத்திரமே பதியப்படுகின்றன. | ………………. |
| D - | ஒதுக்கங்களை மூலதனமாக்கும் போது உரிமையாண்மையில் மாற்றம் ஏற்படாது. | ………………. |

(32) வணிகமொன்றில் இடம்பெற்றுள்ள பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் **சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை** ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக்கத்தை **அதிகரிக்கும், குறைக்கும், மாற்றமில்லை** எனக் குறிப்பிடுக.

| | **கொடுக்கல் வாங்கல்கள்** | **சொத்துக்கள்** | **பொறுப்புக்கள்** | **உரிமையாண்மை** |
|---|---|---|---|---|
| A - | பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு | ………………. | ………………. | ………………. |
| B - | கழிவு கழித்த பின்னர் வியாபார வருமதியாளர்களிடமிருந்து காசு கிடைத்தல். | ………………. | ………………. | ………………. |
| C - | மோட்டார் வாகனமொன்றை நிதிக் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் | ………………. | ………………. | ………………. |
| D - | நிறுவனத்தின் செலவினை உரிமையாளர் தனது சொந்த நிதியிலிருந்து செலுத்துதல். | ………………. | ………………. | ………………. |

(33) பின்வரும் முதன்மை ஏடுகளுக்கு உரித்தான மூல ஆவணங்களைக் குறிப்பிடுக.

| | **முதன்மை ஏடுகள்** | **மூல ஆவணங்கள்** |
|---|---|---|
| A - | காசுக் கொடுப்பனவு நாளேடு | ……………………. |
| B - | விற்பனை நாளேடு | ……………………. |
| C - | கொள்வனவுத் திரும்பல் நாளேடு | ……………………. |
| D - | பொது நாட்குறிப்பேடு | ……………………. |


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

(34) நிறுவனமொன்றினால் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்கள் நோக்கத்தின் அடிப்படையில் இரு வகைப்படும். அவற்றைக் குறிப்பிடுக.

1. …………………………………………………………………………………………………………………..

2. …………………………………………………………………………………………………………………..

(35) நிறுவனமொன்றின் சில்லறைக் காசு தொடர்பான தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| விபரம் | திகதி | ரூபா |
|---|---|---|
| சில்லறைக் காசுக் கணக்கு மீதி | 2020.10.01 | 1 600 |
| வசக்கட்டுத் தொகை மீள் நிரப்பல் | 2020.10.01 | 3 400 |
| சில்லறைக் காசுக் கொடுப்பனவுகள் | 2020.10.31 | 4 600 |

2020 நவம்பர் மாதத்திலிருந்து சில்லறைக் காசு வசக்கட்டு நிதியினை ரூபா 2 000 இனால் அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அ) 2020.11.01 இல் மீள் நிரப்ப வேண்டிய தொகை ……………………………………………………………

ஆ) சில்லறை காசு மீள் நிரப்பலுக்கான நாட்குறிப்புப் பதிவு (விளம்பல் அவசியமில்லை)

…………………………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………………………..

(36) சில்லறை வியாபாரம் ஒன்றின் பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக.

| சந்தர்ப்பங்கள் | கணக்கீட்டு எண்ணக்கரு |
|---|---|
| A - நிதிக் குத்தகையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்தொன்றினை நிதிநிலைமைக் கூற்றில் சொத்தொன்றாக வெளிப்படுத்துதல். | ………………………… |
| B - பொருட்கள் விற்பனை செய்யப்படும் பொழுது அதனை விற்பனை வருமானமாக வருமான கூற்றில் இனங்காணல். | ………………………… |
| C - விற்பனை மீதான உத்தரவாத ஏற்பாடொன்றினை மேற்கொள்ளல். | ………………………… |
| D - இருப்பு மதிப்பிடலுக்கு தொடர்ந்து 5 வருடங்களாக முதல் உள் முதல் வெளி (FIFO) முறையைப் பயன்படுத்துதல். | ………………………… |

(37) பெரேரா சில்லறை வணிகத்தின் 2020.03.31 இல் உள்ளவாறான வங்கிக் கூற்று மீதியானது அன்றைய தினத்தினாலான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை விட அதிகரித்துக் காணப்பட்டது. (காசுக் கட்டுப்பாட்டு கணக்கிலும், வங்கிக் கூற்றிலும் எவ்வித வழுக்களும் இடம்பெறவில்லை என கருதுக) மேற்படி இரு மீதிகளும் வேறுபடுவதற்கான இரு காரணங்களைக் குறிப்பிடுக.

1. …………………………………………………………………………………………………………………

2. …………………………………………………………………………………………………………………

(38) ராஜா வணிகத்தின் 2020.03.31 இல் உள்ளவாறான இருப்புக்கள் முழுவதும் தீயினால் முற்றாக அழிவடைந்தன. இதில் 80% ஐ நட்டஈடாகத் தருவதாக காப்புறுதி கம்பனி உடன்பட்டது. 2020.03.31 இல் பின்வரும் தகவல்கள் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

- 2019.04.01 இல் இருப்பு ரூபா 250 000
- ஆண்டுக்கான கொள்வனவுகள் ரூபா 800 000
- ஆண்டுக்கான விற்பனை ரூபா 1 200 000
- நிறுவனமானது கிரயத்தில் 20% இலாபம் வைத்து பொருட்களின் விற்பனை விலையினைத் தீர்மானிக்கின்றது.

அ) தீயினால் அழிவடைந்த இருப்புக்களின் பெறுமதி எவ்வளவு? ……………………………………………………..

ஆ) இருப்பு அழிவினால் 2020.03.31 இல் உள்ளவாறான நிறுவனத்தின் சொத்துக்களில் ஏற்படுத்திய தேறிய தாக்கம் எவ்வளவு? ……………………………………………………………………………………



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

NWP-EXAM

(39) வரையறுத்த பாரதி பொதுக் கம்பனியின் 2020.03.31 இல் உள்ளவாறான வியாபார வருமதியாளர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூபா 350 000 ஆகும். எனினும் இம் மீதி அன்றைய தினத்திலான வியாபார வருமதியாளர் பேரேட்டுப் பட்டியல் மீதியுடன் இணங்கவில்லை. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் இனங்காணப்பட்டன.

- ரூபா 300 000 கடன் விற்பனை மீதான 15% பெறுமதி சேர் வரி (VAT) வியாபார வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படவில்லை.
- ரூபா 8 000 செலவுத் தாளொன்று கணக்குகளில் முற்றாக தவிறவிடப்பட்டுள்ளது.
- ரூபா 10 000 கொடுத்த கழிவானது குறித்த வியாபார வருமதியாளர் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

2020.03.31 இல் உள்ளவாறான வியாபார வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கின் சீராக்கிய மீதி எவ்வளவு?

……………………………………………………………………………………………

(40) இலாப நோக்கற்ற வணிக அமைப்பொன்றின் காசுக் கணக்கிற்கும், வருமான செலவுக் கணக்கிற்கும் (வருமானக் கூற்று) இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

| கூறுகள் | காசுக் கணக்கு | வருமான செலவுக் கணக்கு |
|---|---|---|
| 1. தயாரிப்பதன் நோக்கம் | ………………………… | …………………………… |
| 2. தயாரிப்பதற்கான அடிப்படை | ………………………… | …………………………… |

(41) பங்குடைமை வணிகமொன்றில் பங்காளர்களின் உரிமையாண்மை மாற்றமடையும் இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

(42) 2019.04.01 இல் ரூபா 900 000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட காணியொன்று 2020.03.31 இல் ரூபா 950 000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. இம்மீள் மதிப்பீட்டினால் உருவான மிகை அல்லது குறையினைப் பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவினை பெறுமதியுடன் தருக. (விளம்பல் அவசியமில்லை)

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

(43) 2017.04.01 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 800 000 கிரயமான மோட்டார் வாகனம் ஆண்டுக்கு 10% நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடப்படுகிறது. இம் மோட்டார் வாகனமானது 2019.04.01 இல் ரூபா 720 000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வருவனவற்றைக் கணிக்க.

1. மீள் மதிப்பீட்டினால் உருவான மிகை அல்லது குறை ………………………………………
2. 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மோட்டார் வாகனப் பெறுமானத் தேய்வு எவ்வளவு?

……………………………………………………………………………………………

(44) கம்பனியொன்று 2019.04.01 ஒவ்வொன்றும் ரூபா 50 படி 100 000 சாதாரணப் பங்குகளை பிரசுரிப்பதற்காக விண்ணப்பங்களைக் கோரியதுடன், 120 000 சாதாரண பங்குகளுக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலதிக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டதுடன், ஏனையவை மூலதனமாக்கப்பட்டன.
மேற்படி பங்கு வழங்களுடன் தொடர்புடைய நாட்குறிப்புப் பதிவினை எழுதுக.

1. காசுப் பெறுவனவு

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

2. பங்குகளை ஒதுக்குதல்

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

(45) வரையறுத்த சில்வா பொதுக் கம்பனியின் 2019.04.01 இல் உள்ளவாறான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

- கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் ரூபா 8 000 000
- நிறுத்தி வைத்த வருவாய் ரூபா 5 000 000

2019.10.01 இல் ஒவ்வொன்றும் ரூபா 30 படி 100 000 சாதாரணப் பங்குகள் நிறுத்தி வைத்த வருவாயினைப் பயன்படுத்தி மூலதனமாக்கப்பட்டது.

1. 2020.03.31 இல் உள்ளவாறான கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் ..............................
2. 2020.03.31 இல் உள்ளவாறான கம்பனியின் மொத்த உரிமையாண்மை ..............................

(46) வரையறுக்கப்பட்ட பொது கம்பனியொன்றில் பின்வரும் ஒவ்வொரு நிதிக்கூற்றும் தயாரிப்பதற்கான அடிப்படையைக் குறிப்பிடுக.

| **நிதிக்கூற்றுக்கள்** | **அடிப்படை** |
|---|---|
| A - மொத்த முற்றுமடங்கிய வருமானக் கூற்று | ......................... |
| B - உரிமை மாற்றல் கூற்று | ......................... |
| C - காசுப்பாய்ச்சல் கூற்று | ......................... |
| D - நிதி நிலைமை கூற்று | ......................... |

(47) வரையறுக்கப்பட்ட பாலா பொதுக் கம்பனியின் 2020.03.31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன.

- சம்பளம் ரூபா 3 000 000
- செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதி (EPF) ரூபா 300 000

ஊழியர் சேமலாப நிதிக்காக (EPF) தொழில் கொள்வோர் மற்றும் ஊழியர் பங்களிப்பு முறையே 15% மற்றும் 10% ஆவதுடன், ஊழியர் பங்களிப்பானது உரிய முறையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

1. 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஊழியர் சேமலாப நிதிச் செலவு ரூபா .....................
2. 2020.03.31 இல் உள்ளவாறான ஊழியர் சேமலாப நிதி தொடர்பான பொறுப்பு ரூபா .....................

(48) வரையறுக்கப்பட்ட விஷ்வா பொதுக் கம்பனிக்கு எதிராக வாடிக்கையாளர் ஒருவரினால் நட்ட இழப்பீடு கோரி வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. எனினும் இது தொடர்பில் இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை. மேற்படி நிகழ்வு தொடர்பில் LKAS 37 (நிகழத்தக்கச் சொத்துக்கள், நிகழத்தக்கப் பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்) நியமத்திற்கு அமைய கம்பனியானது நிதிக்கூற்றுக்களில் எத்தகைய வெளிப்படுதலை மேற்கொள்ளல் வேண்டும்?

.......................................................................................................................................
.......................................................................................................................................

(49) கம்பெனியொன்றின் 2020.03.31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன. (ரூபா 000)

- 2019.04.01 இல் வருமான வரி ஏற்பாடு 350
- செலுத்திய வருமான வரி 2018/2019 500

2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானவரி பொறுப்பு ரூபா 800 000 என மதிப்பீடு செய்யப்பட்டது.

1. 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய வருமான வரி செலவு ரூபா .......................................................................................................
2. 2020.03.31 இல் உள்ளவாறான வருமான வரி பொறுப்பு ரூபா ..........................................................

(50) வரையறுக்கப்பட்ட பொது கம்பனிகள் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு குறிப்புகளை வெளிப்படுத்தும். அவ்வாறு வெளிப்படுத்தக்கூடிய கணக்கீட்டு குறிப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

1. .......................................................................................................................................
2. .......................................................................................................................................


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் Provincial Department of Education NWP

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

33 T II

## முதலாம் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2020
## First Term Test - Grade 13 - 2020

சுட்டெண் : ........................

கணக்கீடு II
Accounting II

காலம் : 3 மணி

- **1ஆம் 2ஆம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

(1) **வரையறுக்கப்பட்ட மாறா பொதுக் கம்பனியின் 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வருமாறு:**

| விபரம் | வரவு (ரூ 000) | செலவு (ரூ 000) |
|---|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் (கிரயம்) | 12 000 | |
| வியாபார வருமதிகள் | 1 250 | |
| 2019.04.01 இல் இருப்பு | 220 | |
| விளம்பரம் | 400 | |
| சம்பளம் | 600 | |
| கொடுத்த கழிவு | 50 | |
| இயக்குனர் கட்டணம் | 250 | |
| கணக்காய்வுக் கட்டணம் | 150 | |
| கொள்வனவு | 3 900 | |
| மின் கட்டணம் | 40 | |
| செலுத்திய வங்கித் தவணைக் கட்டணம் | 260 | |
| தொலைபேசிக் கட்டணம் | 60 | |
| 10% திறைசேரி உண்டியல் (2020.03.31 இல் பெற்றுக் கொள்ளப்பட்டது) | 100 | |
| காசு | 420 | |
| செலுத்திய பங்கிலாபம் | 300 | |
| விற்பனை | | 11 100 |
| கூறப்பட்ட சாதாரணப் பங்கு மூலதனம் | | 6 000 |
| நிறுத்தி வைத்த வருவாய் (2019.04.01 இல்) | | 300 |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் திரண்டத் தேய்வு (2019.04.01 இல்) | | 600 |
| பெற்ற கழிவு | | 100 |
| வங்கிக் கடன் (2019.04.01 இல்) | | 1 000 |
| வியாபார சென்மதிகள் | | 900 |
| | **20 000** | **20 000** |

**வரையறுக்கப்பட்ட மாறா பொதுக் கம்பனியின் 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வரும் விடயங்கள் சீராக்கம் செய்யப்படல் வேண்டும்.**

(i) 2020.03.31 இல் உள்ளவாறான இருப்புக்களின் கிரயம் ரூபா 120 000 ஆவதுடன், அன்றைய தினத்திலான அவற்றின் தேறிய தேறத்தக்கப் பெறுமதி ரூபா 80 000 ஆகும்.

(ii) 2019.04.01 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

| விபரம் | பெறுமானத் தேய்வு வீதம் | கிரயம் (ரூ 000) | 2019.04.01 இல் திரண்டத் தேய்வு (ரூ 000) |
|---|---|---|---|
| காணி | - | 6 000 | - |
| கட்டடம் | 5% | 3 000 | 300 |
| மோட்டார் வாகனம் | 10% | 2 000 | 200 |
| காரியாலாய உபகரணங்கள் | 5% | 1 000 | 100 |
| | | **12 000** | **600** |



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

(iii) 2019.04.01 இல் காணியானது முதல் தடவையாக ரூபா 7 000 000 இற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், இது தொடர்பில் எவ்வித பதிவும் இன்னும் இடம்பெறவில்லை.

(iv) 2018.04.01 இல் ரூபா 1 000 000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்று 2019.04.01 இல் ரூபா 1 100 000 இற்குக் விற்பனை செய்யப்பட்டதுடன், விற்பனை மூலம் பெறப்பட்ட காசானது காசுக் கணக்கில் வரவிலும், விற்பனைக் கணக்கில் செலவிலும் பதியப்பட்டதைத் தவிர வேறு எவ்விதப் பதிவும் இடம்பெறவில்லை.

(v) 2020.03.31 இல் அட்டுரு கணக்காய்வுக் கட்டணம் ரூபா 50 000 ஆகும்.

(vi) ரூபா 50 000 பெறுமதியான வியாபார வருமதியாளர் ஒருவர் முறிவடைந்தமையினால் மதிப்பு குறைப்பு நட்டமாகப் பதிவளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டதுடன், எஞ்சிய வியாபார வருமதியாளர் மீது ரூபா 120 000 இனை எதிர்ப்பார்க்கை நட்டப்படிகளாக ஏற்பாடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(vii) வங்கிக் கடனானது 5 ஆண்டுகால தவணைக் கட்டணக் கொடுப்பனவு அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆண்டுக்கான வங்கித் தவணைக் கட்டணம் ரூபா 260 000 ஆவதுடன், அவற்றுள் உள்ளடங்கியுள்ள ஆண்டு வட்டி ரூபா 60 000 ஆகும்.

(viii) கம்பனியானது 2019.04.01 இல் இருந்து ஒரு வருட கால உத்தரவாதத்துடன், பொருட்களை விற்பனை செய்து வருகிறது. அதற்காக விற்பனையில் 2% உத்தரவாத ஏற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும் என நம்பகரமாக மதிப்பிடப்பட்டது.

(ix) நடைமுறை ஆண்டுக்கான வருமான வரி ரூபா 750 000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

(x) 2020.03.31 இல் இயக்குனர் சபையின் தீர்மானங்கள் பின்வருமாறு:

- ரூபா 500 000 இனை பொது ஒதுக்கத்திற்கு மாற்றுதல்.
- சாதாரணப் பங்குதாரர்களுக்கு ரூபா 250 000 ஐ இறுதி பங்கிலாமாக முன்மொழிதல்.

**<u>வேண்டப்படுவது:</u>**

LKAS 01 (நிதிக் கூற்றுக்களை அறிக்கைப்படுத்தல்) நியமத்திற்கமைய வரையறுக்கப்பட்ட மாறா பொதுக் கம்பனியின் பிரசுரிக்கத்தக்க பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட)

1. 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று.
2. 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றல் கூற்று.
3. 2020.03.31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று. **(40 புள்ளிகள்)**

**(2)** (அ) கீதா மற்றும் நீதா ஆகியோர் முறையே 3:2 எனும் இலாப நட்ட விகிதத்தில் நடாத்திச் செல்கின்ற பங்குடைமை வணிகத்தின் 2019.03.31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்று பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| | | **(ரூபா 000)** | |
| **நடைமுறை அல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | | | 2 800 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்பு | | 500 | |
| வியாபார வருமதிகள் | | 540 | |
| காசு | | 20 | 1 060 |
| | | | **3 860** |
| **மூலதனக் கணக்கு** | கீதா | 1 600 | |
| | நீதா | 1 000 | 2 600 |
| **நடைமுறைக் கணக்கு** | கீதா | (200) | |
| | நீதா | 500 | 300 |
| கடன் கணக்கு - கீதா | | | 600 |
| வியாபார சென்மதிகள் | | | 360 |
| | | | 3 860 |



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

NWP EXAM

(i) 2019.04.01 இல் சீதா என்பவர் இப்பங்குடையின் புதிய பங்காளராக இணைத்துக் கொள்ளப்படதுடன், புதிய பங்குடைமை ஒப்பந்தம் பின்வருமாறு:

- கீதா, நீதா, சீதா ஆகியோர் முறையே 5 : 3 : 2 எனும் விகிதத்தில் பங்குடைமை தொடர்ந்து நடாத்துதல்.
- கீதா மாதாந்தம் ரூபா 15 000 மற்றும் நீதா மாதாந்தம் ரூபா 10 000 பங்குடைமைச் சம்பளமாகப் பெற உரித்துடையவர்கள் ஆவர்.
- பங்காளர்களினால் பங்குடைமைக்கு வழங்கப்படும் கடன்களுக்கு ஆண்டுக்கு 10% வட்டி வழங்கப்படும்.
- நன்மதிப்பினை தனியொரு கணக்காக பேணாது, அதனை மூலதனக் கணக்கினூடாக சீராக்கம் செய்தல்.

(ii) சீதா பங்குடைமைக்கு இணையும் போது ரூபா 200 000 கிரயமான காரியாலய உபகரணங்களையும், ரூபா 250 000 காசினையும் மூலதனமாகக் கொண்டு வந்ததுடன், அன்றைய தினம் இப்பங்குடையின் நன்மதிப்பு ரூபா 250 000 என மதிப்பிடப்பட்டது.

(iii) அனைத்து கொள்வனவுகளும், விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகும்.

(iv) <u>2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டு காலத்தில் காசுப் பெறுவனவுகள் மற்றும் காசுக் கொடுப்பனவுகள் பின்வருமாறு:</u>

| | (ரூ 000) |
|---|---|
| வியாபார வருமதியாளர்களிடமிருந்து பெறுவனவு | 6 700 |
| வியாபார சென்மதியாளர்களுக்குக் கொடுப்பனவு | 3 300 |
| செயற்பாட்டுச் செலவுகள் செலுத்தியது | 1 740 |

<u>2020.03.31 இல் உள்ளவாறான பங்குடையின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்டபட்ட சில தகவல்கள் பின்வருமாறு:</u>

| | (ரூ 000) |
|---|---|
| வியாபார வருமதிகள் | 800 |
| வியாபார சென்மதிகள் | 260 |
| இருப்புக் கிரயம் | 400 |
| அட்டுரு செயற்பாட்டுச் செலவுகள் | 80 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 2 600 |

(v) ஆண்டு காலத்தினுள் கீதா மற்றும் நீதா ஆகியோருக்கு 10 மாதங்களுக்கான சம்பளம் காசாகச் செலுத்தப்பட்டுள்ளதுடன், அது செயற்பாட்டுச் செலவினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(vi) புதிய பங்காளரான சீதாவினால் கொண்டு வரப்பட்ட காரியாலய உபகரணங்களைத் தவிர ஆண்டு காலத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வேறு எவ்வித சேர்ப்பனவோ, அகற்றலோ இடம்பெறவில்லை. ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு இன்னும் பதியப்படவில்லை.

(vii) கீதாவுக்குச் சொந்தமான கட்டமொன்றில் பங்குடைமையானது மாதாந்தம் ரூபா 20 000 வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்லப்படுவதுடன், அதற்காக ஆண்டுகாலத்தில் 8 மாதங்களுக்காகச் செலுத்தப்பட்ட வாடகையானது செயற்பாட்டுச் செலவினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
மேலும் கீதாவினால் வழங்கப்பட்ட கடனுக்கான ஆண்டு வட்டி அட்டுருவாக உள்ளது.

(viii) பங்குடைமையின் வருடாந்த காப்புறுதித் தவணைக் கட்டணம் ரூபா 20 000 ஆனது நீதாவினால் செலுத்தப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் எவ்வித பதிவும் இடம்பெறவில்லை.

**வேண்டப்படுவது:**

1) 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று (பகிர்வு உட்பட)
2) 2020.03.31 இல் உள்ளவாறான பங்காளர்களின் மூலதனக் கணக்கு மற்றும் நடைமுறைக்கணக்கு

**(20 புள்ளிகள்)**

